செ.வெ.எண்: 54 நாள்: 18/01/2011

பாளையங்கோட்டையில் ரூ.50 இலட்சத்தில் விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரனுக்கு சிலையுடன் கூடிய மணிமண்டபம் – மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

--------

இந்திய விடுதலைக்காக பாடுபட்ட வீரர்களை போற்றி பாராட்டும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் இன்னுயிர் நீத்தவர்களை தற்கால சந்ததியினர் அறிந்து கொள்ளும் வகையில் அவர்களுக்காக நினைவுச் சின்னங்களையும், சிலையுடன் கூடிய மணிமண்டபங்களையும் அமைத்து வருகிறார்கள்.

அதனடிப்படையில் நெல்லை மாவட்டம், நெற்கட்டும்செவலில் பல்வேறு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு ஆங்கிலேயர்களுக்கு எதிராக போராடி இன்னுயிர் நீத்த விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க ரூ. 50 இலட்சத்தில் திருநெல்வேலி–திருச்செந்தூர் சாலையில் திருநெல்வேலி மாவட்ட நீதிமன்ற வளாகத்திற்கு எதிரில் ஆவின் பாலகத்திற்கு அருகில் 63.38 செண்ட் நிலப்பரப்பில் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டு விழா பாளையங்கோட்டை பெல் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் இன்று (18.01.2011) நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையேற்று சிலையுடன் கூடிய ஒண்டிவீரன் மணிமண்டபத்திற்கு அடிக்கல் நாட்டி, பேசியதாவது–

இது தமிழக வரலாற்றில் சிறப்பு மிக்க நிகழ்வு. நெல்லைச்சீமை வீரம் விளைந்த நிலம். நெல்லைச்சீமை வீரத்தோடு, சமத்துவத்தையும் வளர்த்து வருகிறது. ஒரு முயலை வேட்டை நாய் ஒன்று துரத்தி வருகிறது. அந்த முயல் பாஞ்சாலங்குறிச்சி எல்லைக்குள் வந்தவுடன் வேட்டை நாயை எதிர்த்தது. எத்தகைய ஆற்றலை கொண்டவர்களையும் எதிர்த்து , போராடக்கூடிய வீரர்களை கொண்டது தமிழ் மண். வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு பாளையத்தலைவராக வெள்ளையத்தேவரும், வீரன் சுந்தரலிங்கனாரும் இருந்தது போல் பூலித்தேவரின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்ததுடன், வெள்ளையனை எதிர்த்து முதல் முதலாக குரல் கொடுத்தது மாவீரன் ஒண்டிவீரன் ஆவார். தமிழ்மொழிக்கு தொண்டாற்றியவர்களுக்கும், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் வீரர்களுக்கும் நினைவுச் சின்னங்கள், மணிமண்டபங்களை அமைத்து வரும் இனமானத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரானர் அவர்களுடன் இணைந்து போராடிய தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு தர்மபுரியில் மணிமண்டபத்திற்கான அடிக்கல்லை இந்த அரசு நாட்டியதுடன், செங்கோட்டையில் விடுதலைப் போராட்ட தியாகி வீரவாஞ்சிநாதன் அவர்களுக்கு மணிமண்டபத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அடிக்கல்லை நாட்டி, பணிகள் நடைபெற்று வருகின்றன்.

அதுபோன்று நாகர்கோவிலில் தந்தை நேசமணி அவர்களுக்கு மணிமண்டபத்திற்கான அடிக்கல்லையும், எளிமைக்கும், நேர்மைக்கும் உரியவரான முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூரார் மணிமண்டபம் அமைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசு நடவடிக்கை மேற்கொண்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவின்பேரில் பேரறிஞர் அண்ணா அவர்களின் சமாதியில் எரியும் அணையா விளக்கு போன்று, கல்விக்கண் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் நினைவு இல்லத்திலும் அமைக்கப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில், ஆங்கிலேய தளபதி கர்னல் ஹெரான் தலைமையிலான **2000** வீரர்களுடன் கூடிய பெரும்படையை போரிட்டு வென்ற ஒண்டிவீரன் அவர்களுக்கு தற்போது நெல்லைச் சீமையில் ரூ. **49.50** இலட்சம் செலவில் மணிமண்டபமும், ரூ.**5** இலட்சம் செலவில் முழுஅளவிலான திருவுருவச் சிலையும் அமைக்கப்படும். பூலித்தேவனுடன் இணைந்து போராடி பேதங்கள் இல்லாத உணர்வின் தொடர்ச்சியாக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை அளித்து வருகிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உயர்கல்விக்கான நுழைவுத் தேர்வினை நீக்கினார்கள். இது மறுபடியும் மத்திய அரசால் கொண்டுவரப்படும் என தெரிந்தவுடன் அதனை மறுபரிசீலனை செய்யக்கோரி தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும், இஸ்லாமிய சமுதாயத்திற்கு மூன்று சதவீத இடஒதுக்கீடு வழங்கியது போல் அருந்ததியினருக்கும் மூன்று சதவீத உள்ஒதுக்கீடு வழங்கி இதுவரை **1000** மேற்பட்டவர்களுக்கு பட்டம் மற்றும் மேற்படிப்பை தொடர்ந்து வருகிறார்கள். இந்த மணிமண்டப பணிகள் விரைவில் பூர்த்தி செய்யப்படும், பணிகள் முடிவடைந்தவுடன் இதே மணிமண்டபத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களோ அல்லது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களோ திறந்து வைப்பார்கள் . சாதி, மாதபேதமின்றி எவ்வாறு அருந்ததி சமுதாயத்தைச் சேர்ந்த மாவீரன் ஒண்டிவீரன் எவ்வாறு வாழ்ந்தாரோ அதுபோன்று நாம் அனைவரும் சாதி, சமயமற்ற சமுதாயத்தை உருவாக்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

விழாவில் மாண்புமிகு சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு.டி.பி.எம்.மைதீன்கான் அவர்கள், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர். பூங்கோதை ஆலடிஅருணா அவர்கள் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசுச் செயலர் திரு.ரா.சிவகுமார்,இ.ஆ.ப., அவர்கள் திட்ட விளக்கவுரையும், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.ஜெயராமன்,இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையும், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.கா.பாஸ்கரன்,இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரையும் ஆற்றினார்கள். விழாவில் வணக்கத்திற்குரிய மாநகராட்சி மேயர் திரு.ஏ.எல்.சுப்பிரமணியன், திரு. எஸ்.எஸ். ராமசுப்பு,எம்.பி., தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பதனிடுவோர் தொழிலாளர் நலவாரிய தலைவர் திரு. வலசை இரவிச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. வீ. கருப்பசாமிபாண்டியன், திரு. என். மாலைராஜா, திரு.மு.அப்பாவு, திரு.ஹரி. வசந்தகுமார், திரு.பா.வேல்துரை, மாவட்ட வேளாண் விற்பனைக்குழுத் தலைவர் திரு.ச.கணேசன், மாநகராட்சி துணை மேயர் திரு.கா.முத்துராமலிங்கம், பாளை மண்டலத் தலைவர் திரு.சுப. சீத்தாராமன், மாமன்ற உறுப்பினர் திரு.பி.பிராங்கிளின் உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

2/2

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9